# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35, வ.ஆ. 2007, தை 14, முஹறம் 25, (28-1-76) புதன், புத்தகம் 29, இதழ் 30


## வெடிகள் தயார்

தமிழ் ஈழத் தீர்மானம் தேசியப் பேரவையில்விளைதிக்கப்படும் தினத்தில் தமிழ்ஈழமெங்கும் ஏன் இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, தமிழகம் எங்கும் உதயசூரியன் கொடி ஏற்றி வைக்கப்படவுள்ளது தெரிந்ததே.

—4ம் பக்கம் பார்க்க

# ஐ. நா. சபை முன்பும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

பெப்ரவரி 4 — தமிழ் ஈழத் தீர்மானத்துக்கு ஆதரவாக இத்திங்கள் 31ம் நாள் இலண்டனில் ஈழ விடுதலை முன்னணியினர் மாபெரும் ஆர்ப்பாட்டஊர்வலம்ஒன்றை நடத்தி தமிழ் ஈழத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி சிறிலங்கா பிரதமருக்கு ஆலோசனை கூறுமாறு காமன் வெல்த் நாடுகளின் தலைவர் என்ற முறையில் பிரிட்டிஷ் பிரதமர் ஹரோல்ட் வில்சனிடம் ஓர் மகஜரையும் கையளிக்கவிருக்கிறார்கள் அல்லவா?

இதைத் தொடர்ந்து மிக விரைவில் நியூயார்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்பும் தமிழ் ஈழக் கோரிக்கையை வலியுறுத்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு மேற்கு நாடுகளிலும் தமிழகத்திலுமுள்ள தமிழ் ஈழ விடுதலை ஆதரவு இயக்கங்கள் திட்டமிட்டுவருவதாகத் தெரிகிறது.

இலண்டனிலுள்ள ஈழ விடுதலை முன்னணியும், ஏனைய தமிழ் ஈழ ஆதரவு இயக்கங்களும், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள தமிழர் இயக்கங்களும் இந்தியாவிலுள்ள உலகத் தமிழ் இளைஞர் பேரவை, உலகத் தமிழர் பாதுகாப்புப் பேரவை ஆகிய இயக்கங்களும் சேர்ந்து ஐ. நா. சபை முன் ஆர்ப்பாட்டத்தை நடத்துப் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன், பாலஸ்தீனிய விடுதலை முன்னணி போன்ற வெளிநாடுகளிலுள்ள விடுதலை இயக்கங்களின் தார்மீக ஆதரவைப் பெறும் முயற்சியிலும் இலண்டனிலுள்ள ஈழ விடுதலை முன்னணி ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகிறது.

—4-ம் பக்கம் பார்க்க

## பொங்கலுக்கு ஏற்பாடு!

தமிழ்ஈழத் தீர்மான நாளான பெப்ரவரி 4ம் நாள் தமிழ் ஈழ விடுதலைக் கொடியாகிய உதயசூரியன் கொடிகள் உயர்த்தப்படும் அதே வேளையில் அதிகாலையில் உதயசூரியனுக்கு பொங்கிப்படைத்து விழாக் கொண்டாடவும் தமிழ் பெணகள் ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

## மட்டக்களப்பில் மாபெரும் கூட்டம்!

பெப்ரவரி-4 நடவடிக்கைகளை மக்களுக்கு எடுத்து விளக்கவும், தமிழ் ஈழம் பற்றி விளக்கமளிக்கவும் மாபெரும் பொதுக்கூட்டம் 1-2-76ல் மட்டக்களப்பில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் தமிழர் கூட்டணியின் சகல பா. உ.க்களும் பிரமுகர்களும் தமிழ் இளைஞர்பேரவைத் தலைவர்களும் வீரமுழக்கம் செய்யவிருக்கின்றனர். மட்டக்களப்பு அரசியல் வானிலே ஒரு பெரிய திருப்புமுனையாக அமையவிருக்கும் இக் கூட்டத்தை மட்டக்களப்பு தமிழ் இளைஞா பேரவை, தமிழர் கூட்டணி ஆகியன கூட்டாக நடத்துகின்றன.



# தி.மு.க வுக்கு தடை வந்தால்..?

இந்திமொழித் திணிப்பை எதிர்த்தும் — மாநில சுயாட்சி முழக்கத்தையெழுப்பியும் வரும் தமிழ் நாட்டின் தேசிய இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு தடை விதிக்கப்படுமானல், தமிழகத்தில் பெரிய இரத்தக் களரி ஏற்படுமென்றும், இந்தியாவிலிருந்து தமிழ் நாடு பிரிவதற்கு அதுவே அடித்தளமாக அமையுமென்றும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஆளும் இந்திராகாங்கிரசின் தலைவர் திரு. பரூவா தமிழக அரசாங்கம் கலைக்கப்படுமென்றும் தி. மு. கழகத்துக்கும் தடை விதிக்கப்படுமென்றும் அண்மையில் மிரட்டியிருப்பது தெரிந்ததே.

அண்மையில் கோவையில் நடைபெற்ற தி, மு. கழகத்தின் ஐந்தாவது மாநில மாநாட்டில்கலந்துகொண்ட மக்கள்வெள்ளத்தைக்கண்டு மத்திய டெல்லி கதிகலங்கியிருக்கிறதாம்!

## உதயசூரியன் சின்னங்கள் தயார்!

பாடசாலைமாணவமாணவியரும்மற்றறையோரும் பெப்ரவரி 4ம் நாள் அணியவேண்டிய உதயசூரியன் சின்னங்களும் தயாராகிவிட்டன. இவற்றை யாழ். தமிழர் கூட்டணி அலுவலகத்தில் (238, பிரதான வீதி) பெற்றுக்கொள்ளலாம்.

# குழப்பம்செய்த சிங்களக் காடையருக்கு பாடம் படிப்பித்தனர் தமிழர்!

பொங்கல் விழாவில் புகுந்து தமிழ்ப்பெண்கள் மீது காலித்தனம் புரிய முயன்ற சிங்களக் காடையர்களை ஓட ஓட விரட்டியடித்தார்கள் மலையகத்தில் வாழும் தன்மானத் தமிழர்கள். இச்சம்பவம் தரவளை முத்து மாரியம்மன் கோவிலடியில் நடைபெற்றுள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

தரவளை, டிக்கோயா பகுதிகளிலே பொங்கலன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகள் தோறும் வாழை மரங்களும், மூங்கில் மரங்களும் தமிழன் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற— நோக்கத்தோடு எழுச்சிகரமாக இருந்தன.

அத்திருநாளில் தரவளை— முத்துமாரியம்மன்கோவிலில் கோலாகலமாக பொங்கல் விழா கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள்.

தரவளைப்பகுதியில்தோட்டத்தொழிலாளர்களான தமிழ் மக்கள் 90 வீதமும் சிங்களவர் 10வீதமும் இருக்கிறார்கள். முத்துமாரியம்மன் கோவிலில் தரவளையைச்சேர்ந்த தமிழ் மக்கள் இசைவிழா ஒன்று ஒழுங்கு செய்து அது நடந்துகொண்டிருக்கும் பொழுது, சிங்களக்காடையர்கள் மூவர் தோட்டத் தமிழ் பெண்களை தகாதவார்த்தைகளால் திட்டினர். அப்போது சிங்களவர்களின் காடைத்தனம் மேலும் மேலும் அதிகரித்ததனல் இசைவிழா நடத்திய தமிழ் மக்கள். இசை நிகழ்ச்சியை பாதியில்

—4-ம் பக்கம் பார்க்க

## கோவில்களில் விசேட வழிபாடு!

தமிழ் ஈழத்தீர்மான நாளான பெப்ரவரி 4ம் திகதி தமிழ் ஈழத்திலுள்ள சைவாலயங்களிலும், கிறித்தவ தேவாலயங்களிலும் விசேட பூசைகளையும் வழிபாடுகளையும் நடத்த ஆங்காங்கே சைவ. கிறித்தவ இளைஞர்கள் ஏற்பாடுசெய்துவருகின்றனர். தமிழ் ஈழ விடுதலைப்போராட்டத்தில் வெற்றியீட்டித் தரும்படி இறைவனிடம் பிரார்த்தனை செய்வதே இந்த விசேட பூசைகளின் நோக்கமாகும்.

# பௌத்த சிங்கள வெறிக்குகிறார் பீட்டர் கெனமனின் செயலாளர்!

சிங்கள பௌத்த இன வெறி சிங்களவர்களிடையே உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது. இந்த வெறியுணர்வை அப்படியே பிரதிபலித்திருக்கிறார் சிறிலங்கா பௌத்த பெரமுனவின் அமைப்பாளராகிய டாக்டர் நாத் அமரக்கோன் அவர்கள். டாக்டர் அமரக்கோன்

4—ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையும் டி. எஸ். அளித்த உறுதிமொழியும்!

அந்நிய ஏகாதிபத்தியம் ஆட்சி பீடத்தில் இருக்கும் வரையிலும் இனவாதப் பூசல்களும் போட்டிகளும் மறைந்தே இருந்தன. ஆனால் 1920ம் ஆண்டுகளில் நாட்டின் பிரதிநிதித்துவத்தைக் குறித்து நடைபெற்ற நீண்ட விவாதங்களின்போது, முதல் தடவையாக வகுப்புவாத அடிப்படையில் பிரச்சினைகள் தோன்றத் தொடங்கின. முதலாவது சட்டசபை முற்றிலும் வகுப்புவாத அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டிருந்தது.

1833ம் ஆண்டில் இருந்து 1889ம் ஆண்டு வரை இடம் பெற்ற சட்ட நிரூபண சபைக்கூட்டங்களுக்கு இனவாரி அடிப்படையில் பின்வரும் விகிதாசாரப்படிப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| ஐரோப்பியர்கள் | —3 |
| சிங்களவர் | —1 |
| தமிழர் | —1 |
| பறங்கியர் | —1 |

நாளடைவில் இந்நிலை மாறி, டொனமூர் பிரபுவினால் புதிய அரசியல் சட்டவமைப்புக்கென 1931ம் ஆண்டு பிரதேசப் பிரதிநிதித்துவமுறை (Territorial Representation) அறிமுகப் படுத்தபட்டது. இது விடயத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுக்கிடையே காணப்படும் சிக்கலான நிலை தவிர்க்க முடியாததொன்றாகும். "சமூகங்களுக்கிடையே பகிர்ந்தளிக்க முடியாத முறையில் வரையப்பட்ட பிரதேசத் தேர்தல் தொகுதிகள் மூலமாக, சிறுபான்மையினரின் பாதுகாப்புகள் மறுக்கப்படுவதோடு பெரும்பான்மைச் சமூகத்தினரின் ஆட்சி ஏற்படவும் அது வழிவகுக்கும். இதனை விடுத்து சிறுபான்மையினரின் நலன்களைட்பாதுகாக்க வழிமுறைகளை மேற்கொள்ளும்போதும், நாட்டில் வகுப்புவத அடிப்படையில் பிளவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்"

—B. H. FARMER, OP. CIT. P. 56

### விஸ்டர் கிவேஸ் அறிக்கை

பிரதேசப்பிரதிநிதித்துவ முறையை மட்டும் அறிமுகப் படுத்தியதோடு டொனமூர் கமிசனின் சிபாரிசுகள் நின்றுவிடவில்லை. சர்வதேச ரீதியில் வயதுவந்தோர்க்கான வாக்குரிமை முறையையும் நடைமுறைப்படுத்தியது. ஆசியாக்கண்டத்திலேயே இதனைச் செயல்படுத்திய முதல் நாடு இலங்கையேயாகும்.

இதற்கிடையில் சிங்களச் சமூகத்தினரின் பெரும்பான்மை ஆதிக்கம் ஏற்படக்கூடிய அபாய நிலை குறித்து, இந்தியத் தமிழர்களினதும், இஸ்லாமியர்களினதும் அனுசரணையுடன் தமிழ்த் தலைவர்கள் ராஜாங்கக் காரியதரிசிக்கு மனுவொன்றை அப்பினர். அவர்களின் பயத்தை மேலும் உறுதிப்படுத்துவது போல் புதிதாக உருவாகும் மந்திரி சபை முற்றிலும் சிங்களவர்களைக்கொண்டே செயற்படக்கூடிய சூழ்நிலையும் எழுந்தது.

1944ம் ஆண்டு சுதந்திரத்திற்குரிய அரசியலமைப்பினையாக்கும் பொருட்டு சோல்பரி விசாரணைக்குழுவினர் இலங்கையை வந்தடைந்த சந்தர்ப்பத்தில், இங்கு இனவாதச்சச்சரவுகள் நன்கு வேரூன்றியிருந்தது.

புதிதாக அமைக்கப்பட்ட இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஐம்பதுக்கைம்பது என்ற கொள்கையை முன்வைத்தது. இதன் மூலம் சட்ட சபை ஸ்தானங்களில் சிங்களவர்களின் எண்ணிக்கையை அரைவாசிக்கு மேற்படாமல் கட்டுப்படுத்தவும், மீதி ஆசனங்களைச் சிறுபான்மையினத்தவர்பிரதிநிதித்துவப்படுத்தவும் வழிபிறக்குமென எதிர்பார்க்கப்பட்டது மந்திரிசபையிலும் சரி அரைவாசி இடங்களே ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரைச்சார வேண்டுமென்ற கோரிக்கையும் தமிழர்கள் மத்தியில் இருந்து கிளம்பலாயிற்று.

தமிழ்க் காங்கிரஸின் ஐம்பதுக்கைம்பது கோரிக்கையை அடியோடு நிராகரித்த சோல்பரிக் குழுவினர் வேறு சில பாதுகாப்பு அம்சங்களைத் தமது சிபாரிசில் சேர்த்திருந்தனர். இதன்படி பாராளுமன்ற ஆசனங்கள் சகல ஒன்பது மாகாணங்களிலுமுள்ள பிராந்திய, சனத்தொகை அடிப்படையில் கணிக்கப்பட ஏதுவாயிற்று. தமிழ்ச் சிறுபான்மையினரின் நிலையை மேலும் சற்று உயர்த்தும் நோக்குடன் வடக்கில் ஒரு சில பல அங்கத்தவர் தொகுதிகளும் நிறுவப்பட்டன. இந்த அரசியல் அமைப்புச்சட்டத்தின் மூலம் எந்த இனத்தினரதும் நிலையைப் பலவீனப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ, பாரபட்சமுறையில் முன்னேற்றங்களையும், வசதிகளையும் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு வழங்கவோ, மதரீதியில் பாகுபாடு காட்டவோ முயலும் சகல சட்ட நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டன.

இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை அங்கீகரிக்கும் முக்கியத்துவம் குறித்து, இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைவரும், பிரதம மந்திரியுமான திரு. டி. எஸ். சேனநாயக்கா உறுதியளிக்கையில் சிறுபான்மையினர் நிலைபற்றிப் பின்வருமாறு கூறினர். "சுதந்திர இலங்கையில் எந்தச் சிறுபான்மை இனத்தினரும் எமது நிர்வாகத்தில் எது குறித்தும் கலக்கமடையத் தேவையில்லை என்பதை எனது சொந்தத் சார்பிலும் எனது காங்கிரசின் சார்பிலும் உறுதியளிக்க விரும்புகிறேன்."

எனக்கூறிய அவர் தொடர்ந்து தமிழர்களிடம் கீழ்க்கண்ட வினாவையும் எழுப்பினர்: "தொடர்ந்தும் லண்டனில் இருந்தே ஆட்சியை விரும்புகிறீர்களா அல்லது இலங்கையர்கள் என்ற ரீதியில் இலங்கையை ஆளுவதற்கு உதவி நல்கப் போகிறீர்களா?"

இந்த உறுதிமொழியைத் தொடர்து புதிய அரசியல் திட்டத்தைத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டனர் என்னும், அடுத்து வந்த வருடத்தில் யாழ்ப்பாணத்தில்இடம் பெற்றதேர்தலில் மந்திரிசபை உறுப்பினர் ஒரு வரைத் தோற்கடிக்கச் செய்து, தமிழ்க் காங்கிரஸ் தலைவரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைப் பெரும்பான்மைபலத்துடன் தெரிவு செய்ததின் மூலம் இனவாரித் தலைமையை மக்கள் விரும்புகின்றனர் என்பது நிதர்சனமாயிற்று.

★

(திருத்தம்:- வடக்கில் பல அங்கத்தவர் தொகுதிகள் சில உருவாக்கப்பட்டதன் மூலம் தமிழ் சிறுபான்மையினரின் நிலைமை சற்று சாதகமாக்கப்பட்டதாக மேற்படி கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து தவறானது. அத்தகைய பல அங்கத்தவர் தொகுதிகள் ஒன்றுகூட யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்படவே இல்லை!—ஆர்.)

---

சின்னஞ் சிறிய சுதந்திர நாடுகள்: 4

## மொனேகோ

மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் உள்ள மிகச் சிறிய நாடு பிரான்சின் ஒத்தாசையைக் கொண்ட சுதந்திர நாடு.

இதன் விஸ்திரணம் 368 ஏக்கர். அதாவது சுமார் 9/16 சதுர மைல். (640 ஏக்கர்— 1 சதுரமைல்) சனத்தொகை 20,000

நயினுதீவிலும் பார்க்க எவ்வளவோ சிறியது மொனேகோ. நயினுதீவு மட்டுமல்ல. 10/16 சதுர மைல் கொண்ட எழுவை தீவிலும் பார்க்க சிறிய நாடான மொனேகோ தனி சுதந்திர நாடாக இருக்கும் பொழுது 8000 சதுரமைலை கொண்ட தமிழ் ஈழம் ஏன் சுதந்திர நாடாக இருக்கமுடியாது?

—சிவாசி

---

# சிங்களப் பகுதியிலிருக்கும் தமிழர்கள் தமிழ் ஈழம் நோக்கி வரவேண்டும்!

## அடலேறு ஆலாலசுந்தரம் பேச்சு!

13-1-76 மாலை 6 மணியளவில் பழைய பூங்கா வீதியிலுள்ள திரு. போல் அவர்களின் இல்லத்தில் 6ம் வட்டார தமிழர் கூட்டணி அமைப்பாளர் திரு. க. சி. நாகலிங்கம் அவர்களின் த. கூ. கருத்தரங்கு நடைபெற்றது, தலைவர் திரு. க. சி. நாகலிங்கம் அவர்கள் தலைமை உரையில் 6ம் வட்டாரத்தில் தமிழர் கூட்டணி அமைப்பு இருப்பினும் பலகாலம் இயங்காது வந்தது மிகவும் கவலைக்கிடமான விடயமென்றும், போராட்டக்காலம் வந்ததும் புத்துணர்வு பெற்று, மீண்டும் இயங்கத் தொடங்குகின்றதெனவும், காங்கேசன்துறை இடைத்தேர்தலில் வெற்றியீட்டிய தந்தை செல்வாவிற்கும், சிறை மீண்ட செம்மல் காசி ஆனந்தனுக்கும் வரவேற்பு உபசாரம் வைப்பதற்கு ஊரில் பணம் சேகரித்தோம், ஆனால் அவ்விழாவை வைக்க முடியாது போயிற்று, ஆதலால் அவர்களுக்கென்று சேகரித்த பணத்தை சிறையில் இருக்கும் உணர்ச்சிக் கவிஞரின் குடும்பத்திற்கு அனுப்பத் தீர்மானித்துள்ளதாகவும் மனிதனுக்கு அத்தியாவசிய தேவையான உணவுவகையில் தன்னிறைவு அடைந்துள்ள நாம், ஏன் தனி நாடு கோரக்கூடாது எனவும், தரப்படுத்லாலும், உத்தியோகமின்மையாலும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தாலும் தமிழன் படும் கஷ்டத்தையும் எடுத்து விளக்கி இதற்கு சுபீட்சம் காண வேண்டுமாயின் தனித்தமிழ் நாடு தோன்றியே ஆக வேண்டுமெனவும் வலியுறுத்திஞர்.

அடுத்து சிந்தனைச் சிற்பி கோப்பாய் நா. உ. திரு. கதிரவேற்பிள்ளை பேசும் போது கள்ளுக்கும் காமத்திற்கும் பார்க்காத சாதி ஏன் கல்யாணத்தில் பார்க்கிருர்கள் எனவும் சாதி ஒழிந்தால் பாதி சுதந்திரத்தை நாம் பெற்றுவி[illegible]மென்றும். வன்முறையால் நாம் எதையும் சாதிக்கமுடியாதென்றும், நம்மிடம் தற்சமயம் ஆயுதமில்லையெனவும், அப்படி வன்முறை ஏற்படின் வாலிபரை போருக்குப் பயிற்றுவிக்கவேண்டுமெனவும், வல்லரசுகள் ஆயுதம் தந்துதவினுல் அவர்களின் ஆயுதத்தை உபயோகித்து நாம் வெற்றியீட்டினுலும் அது ஆயுதம் தந்த வல்லரசுகளின் வெற்றியே தவிர நமது வெற்றியல்ல என்றும், ஆகவே எவராலும் அசைக்கமுடியாத ஆயுதம் அகிம்சை ஒன்றே, இதை எதிரிகளாற்கூட அழிக்க முடியாது என்றும், வாலிபர்கள் கட்டுக்கோப்புடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் இயங்கவேண்டியது அவசியமென்றும், அப்படி இயங்கினுல், இன்றோ, நாளையோ வெற்றி கிடைப்பது நிச்சயமென்று கூறிஞர்.

அடலேறு ஆலாலசுந்தரம் பேசும்போது மாசி 4ற்குப் பிற்பாடு [illegible] தமிழர்களை எதிர்நோக்கியுள்ளது. அநாவசியமாக, தேவையற்று சிங்களப்பிரதேசத்தில் இருக்கும் உற்ருர் உறவினரை கூடிய சீக்கிரத்தில் தமிழ்ப் பகுதிக்கு வந்தேகுமாறு வலியுறுத்த வேண்டுமெனவும் கூறிஞர்.

திரு. பாக்கியநாதர்பேசும் போது, தொண்டர்களை கட்டுக்கோப்புடன் இயங்குமாறு அறிவித்துவிட்டு தலைவர்களில் ஒருசிலர் கட்டுக்கோப்புடன் இயங்குகின்ருர்களில்லையெனவும், தீர்மானமொன்றை நிறைவேற்றினுல், அதன்படி தாமும் ஒழுகவேண்டுமெனவும் வலியுறுத்திஞர்.

மற்றும் ஈழவேந்தன் காவலூர் மகேந்திரன் கொழும்பு-3, இ. பேரவை இரகுபதி பாலசிறீதரன் ஆகியோர் சொற்பெருக்காற்றினர். ஈற்றில் கேள்விகளுக்கு சரமாரியான பதில்கள் திரு. ஆலாலசுந்தரத்தால் இரக்கப்பெற்றது. எராளமான வாலிபரும், வயோதிபரும், தாய்மாரும் யுவதிகளும் பங்குபற்றினர். (ந. நிருபர்)

---

## அக்கரைப்பற்று செல்வா பொதுப்பணி மன்றம்!

அக்கரைப் பற்று செல்வா பொதுப்பணிமன்ற புதுவருட பொதுக்கூட்டத்தின்போது பின்வருவோர் நிருவாகத்தினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்:-

தலைவர் - க. சுகுமார், செயலாளர் - யோகராஜ், பொருளாளர் - தி. சிவஞான செல்வம் தீர்மானக் குழுத் தலைவர் - மு. திருநாவுக்கரசு மற்றும் தீர்மானக் குழுவினராக வா. நாகேந்திரன், க. சந்திரசேகரம், சி. கனகசுந்தரம், க. மூர்த்தி, கு. அருளானந்தம் யன்போர்கள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்கள். இத்துடன் அக்கரைப் பற்று இராமக்கிருஷ்ண சங்க மாவித்தியாலயத்தில் விபுலானந்த சிலை நிறுவுவதாகவும் எதிர் வரும் பொங்கல் தினத்தன்றுதமிழர்நிலை பற்றி துண்டுப் பிரசுரம் அக்கரைப்பற்றில் வெளியிடுவதாகவும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டது. தமிழர் கூட்டணித்தலைவர்களால் நடாத்தப்படும். சட்டமறுப்பு போராட்டங்களுக்கு தார்மீக ஆதரவு அளிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையுடன் செயல்பட முடியாதவர்கள் விடுதலை இயக்கத்தை விட்டு வெளியேறட்டும்!

தமிழ் ஈழ விடுதலைக்கு முதற்கண்வேண்டியது தமிழ் மக்களின் ஒன்று திரண்ட ஒற்றுமையே.ஒற்றுமை இன்றேல் எம்மால் ஒன்றும் சாதிக்க முடியாது.

விடுதலைக்கொடியை ஏற்றி வைத்தாலும் சரி விடிய விடிய தொண்டை கிழிய கத்தினுலும் சரி பிரயோசனம் ஏற்படாது.

தமிழ் மக்கள் ஒன்று திரண்டு ஒரே தலைவன் இட்ட கட்டளையை நிறைவேற்றதிடசங்கற்பம்செய்ய வேண்டும்.

தமிழ் மக்களை வழி நடத்திச்செலல நாம் தெரிந்து அனுப்பிய தலைவர்களே ஒற்றுமையாக செயல்படுவதாக காணேம்.

தந்தை செல்வாவின் தலைமையிலேயே ஒற்றுமையாக செயற்பட முடியாதவர்கள் எமது விடுதலைப்போரை எப்படி முன்னின்று நடத்துவார்கள் எனபதுதான் இப்போது தமிழ்மக்கள் மத்தியில் விரக்தியை உண்டாக்கி இருக்கின்றது.

வெளிநாடுகளில் இருக்கின்ற விடுதலை இயக்கஙகள் காட்டி வரும் ஆர்வம்கூட எமது நாட்டில் வாழும் தமிழரிடையே இலலையே அப்போதுஎப்படிஎமது விடுதலைப்போரை நடத்தமுடியும்.

ஒற்றுமையாக செயல்பட முடியாத தலைவர்களை உடனடியாக துரத்திவிட்டு உண்மையாக செயல்படக்கூடிய துடிப்புமிக்க சுதந்திர உணர்ச்சிகொண்ட வாலிபர்களின் கையில் விடுதலைப் போரை ஒப்படைட்பதே நலம். ஒன்றை ஒன்று பார்க்காமல் கோவில்களில் வைத்திருக்கும் நவக்கிரகங்கள் மாதிரி எமக்கு வழிகாட்டிகளாக நாம் தெரிந்து அனுப்பிய தலைவர்கள் இருப்பார்களாயின் நமது விடுதலையை நாம் அடையவே முடியாது.

ஆகவே எமது விடுதலைப் போருக்கு முதற் கண் வேண்டுவது எமது தலைவர்களினதும் எமது மக்களினதும் ஒற்றுமையே. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவற்கும் தாழ்வு.

என். வேலன்
வேலாபுர.
களுத்துறை.

## ● இளைஞர்களின் உணர்ச்சிக் குமுறல்!

'பொறுத்தார் அரசாள்வார் பொங்கினுர் காடுறைவார்'' என்று பெரியோர் கூறினர். நாங்களும்பொறுத்திருந்தோம். எங்கள் அகிம்சை எங்களைச் சந்தி சிரிக்க வைத்துக்கொண்டிருக்கிறது சப்பாணி மந்திகள் என்று எங்களை மாற்றுக் கட்சினர் நையாண்டி செய்யவும் நகைக்கவும் ஏற்பத்தான் தாங்களும் இருந்தோம். எங்கள் கையில் பலமில்லை. உடலில் வலுவில்லை. காலம் வரும் என்று காத்திருந்த காலம்போய்விட்டது. நெஞ்சில் உரமிருக்கிறது.நேர்மையான முறையில் நிராயுதபாணிகளாகப் போருக்குப் புறப்படுவோம், அம்மையாரும் ஒரு பெண் தானே, எங்களில் எத்தனை பேரை அவவின் ஆட்சியாளர் அவவுக்குப் பலிகொடுக்கிறுர்களோகொடுக்கட்டும். கடைசி உள்ள ஒரு தமிழனுவது ஈழவள நாட்டில் தமிழன் என்று தலை நிமிர்ந்து உரிமையோடு வாழவேண்டும்.

பொறுத்தது போதும் கல்வியில் கை வைத்த பிறகும் தரப்படுத்தலுக்குப் பிறகும் தூங்கி வழியும் தூங்கு மூஞ்சிகளாயிருக்க முடியாது. ஆறிலும் நூறிலும் சாவு உண்டு தானே. எனவே தந்தைமாரே தம்பிமாரே அன்னைமாரே தங்கைமாரே குறிப்பாக கூட்டணியை இயக்கும் பெரியாரே கூட்டங்களில் தொண்டை கிழியக்கத்திப் பயனில்லை காரோடிப் பயனில்லை. கால் நடையாகப் போவோம், தேசியப் பேரவை வாசலுக்கு.

எங்களுக்கு நாங்கள் இனிக்கேட்பது தனிநாடு தான். எழுத்தின் மூலமோ, சொல்லின் மூலமோ, வாய்ப்பேச்சின் மூலமோ எங்களுக்கு உரிமை கிடைக்கப் போவதில்லை. எனவே எங்கள் தலைகளையோ எங்கள் உடல்களையோ எந்த நிமிடத்திலும் பலிகொடுக்க நாங்கள் என்றே தயாராகி விட்டோம். குடும்பத்தக்கு ஒவ்வொருவராக அல்ல குடும்பம், குடும்பமாகவே இரத்தம் சிந்தாமல் தனி நாடு கிடையாது. இனிப் பொறுத்திருக்கவும் முடியாது. உங்கள் கட்டளையை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். சிறையிலிருக்கும் வீரர்களின் முடிவு என்ன இனிப்பெண்களின் பின் நீங்கள் செல்லும் நோக்கமா? அதுதமிழ் மரபுக்கு இழுக்கு! இனி நாள் நட்சத்திரம் பார்க்காது வீறு நடை போட்டு அனைவரும் ஒன்று திரண்டு செல்ல உங்கள் அனுமதியை எதிர் பார்க்கிறேன்.

திருமதி. த. தியாகராசா
(கிளிநொச்சி இளைஞர் பேரவை உறுப்பினன்)

●

ஈழத்தமிழகம் அமைத்திட 'சுதந்திரனின் சுயாட்சி குரலோசை கேட்கின்றதை எந்தத் தமிழ் அபி[illegible] காதால் வாங்கிகொள்ளாது வாழா இருக்கமாட்டான். இன்றைய பொருளாதார—சீரழிவுகள்மத்தியில் மலையக தமிழ் பாட்டாளிகள் மங்காத் தமிழ் பண்பை மறந்து மயங்கிய நிலையில் வாழ்கின்றனர்.

18-1-76 அன்றைய சுதந்திரன் இதழை எடுத்ததும். திரு. ஈழமாறன் அவர்கள் எழுதிய சாதியெனும்பேயை சமுதாயத்திலிருந்தே விரட்டுவோம் என்ற கட்டுரை என்னிதயத்தை ஈர்த்தது.

திரு. ஈழமாறன் தனது கட்டுரையில் சிறுபான்மைத் தமிழருக்கென 'சமூககுறைபாடு ஒழிப்புக்குழு'' ஒன்றினை ஸ்தாபித்து அதன் மூலம் பொருளாதார கல்வி, விடயங்களில் நல்ல பலன் அளிக்கக் கூடிய ஆக்கபணியை, தேக்கநிலையையுணர்ந்து ஆரம்பிக்கவேண்டும் என்பதே இம்மடல் மூலம் நான் இயம்பும் ஆணித்தரமன கருத்து. ஆரோக்கியமான பணியை ஆற்ற இன்றே நாடு நகரமெங்கிலும் பணிபுரிய வேண்டும்.

அதே சமயம் தாழ்ந்த சாதியென்று இருப்பவர்கள் மெல்ல முன்னேறும் திசை நோக்கி வளரவேண்டும் அதே சமயம் அவர்களுக்கு வளர்ந்தவர்கள் இருகரம் நீட்டி நேசவுணர்வுடன், பாசமுடன் ஆதரிக்க வேண்டும். இதனை இன்றே செய்ய தமிழ் இளைஞர்கள் தன்னிகரற்ற வீரர்களாய் ஒருசேர திரண்டு ஒப்பற்ற தானைத்தலைவர்களாய் திகழ வேண்டும்.

மலைநாட்டில் வாழ்கின்ற தமிழனும் சிறுபான்மைத் தமிழன் படுந்துயரே பட்டுக் கொண்டிருக்கின்றுன். அவனையும் கருத்தில் கொண்டு ஈழத் தமிழினம் ஒரு நல்ல பாதையில் நடப்பதையே பெரிதும் விரும்புகின்றேன்.

—ஜே. எஸ். வில்வநாதன், [illegible]

●

21-1-76 அன்றைய புதன் சுதந்திரனில் பிரசுரமாய் இருந்த ''காக்கிச் சட்டைக் காடையர்களின் நள்ளிரவுச் சின்னத்தனம்'' என்ற செய்திபார்த்து என் மனம் எரிமலையெனக்கொதித்தது.

தமிழனுக்கு தன் நாட்டில் கூட அவன் விரும்பியதைச் செய்ய அருகதை இல்லையா? தேனினுமினிய தமிழின் பெருமையை ருசிக்க வந்தவர்கள் மீது ஏவல் நாய்களின் கட்டவிழ்த்த செயலுக்கு பத்து சகோதரர்களை தாரை வார்த்தோம். அவர்களின் நினைவாக என்றும் மறவாமல் அவர்களை நினைவூட்டிக் கொண்டிருக்க நினைவுச் சின்னத்தை நிறுவ நமக்கு அருகதை இல்லையா? நினைவுச் சின்னத்தை உடைத்தெறிவதன் மூலம் இறந்த எமது சகோதரர்களின் நினைவையும் எம்மிடையே இருந்து உடைத்தெறிந்து விடலாம் என்று கனவு காண்கிறுர்கள் இந்த நாய்கள்.இது எமக்குமேலும் தூபம் போடுவதாகவே அமைகிறது.

—இரா. கந்தசாமி,
சீதுவை

●

கடந்த சில ஆண்டுகளாக இனவெறி பிடித்த சிங்கள மக்களுடன்சேர்ந்து வாழலாம் என்று நம்பி இப்போ நம்பிக்கெட்டவர்களாக இருக்கின்றேம். எனவே தான் ஆளப்படுமினமாக இன்னமும் இருக்காமல் எமது சொந்தப் பூமியாகிய தமிழ் மண்ணைப் பிரித்தெடுத்து தமிழன் தன்னைத் தானே ஆளும் இனமாக வர வேண்டும். ஆதலினுலே தனிநாடு ஏன் வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கேட்காமல், இந்தத் தனி நாட்டை எப்படி அமைக்கலாம், அதனை என்ன முறையில் நடத்த வேண்டும், அதன் இளைஞர்களாகிய எம்பணி என்ன? என்பதை முதலில் நாம் சிந்திக்க வேண்டும்.

வறுமையிலே வாடி வதங்கிய ஒருவனுக்கு பணம் வந்து விட்டால் அவன் இல்லாதது எல்லாஞ்செய்வான்; தன்னுடன் வறுமையாக இருந்தவனைக்கூட ஆளவும், அதுவும் போதாதென்று அடக்கவும் நினைப்பான்; இதே போன்ற சிங்கள ஆட்சியால் ஆளப்படுவதாலும், ஈடில்லா இணையொத்த ஈழ மண்ணிலே பிறந்தகாரணத்தாலும், எமக்குத் தமிழ்ப் பாலூட்டிய தமிழன்னை பல வருடங்கள் விலங்கு பூட்டப்பட்ட கையுடன் சிறைப்பட்டிருக்கின்றதாலும், அன்னை விலங்கொடிக்க நினைத்த எம் சகோதரர்கள் உயிரை இழந்தும்,சிறையிலே வாடிக் கொண்டும் இருப்பதால் எம்முயிரைப் பெரிதென மதியாது வெகு விரைவில் இன்பத்தமிழ் ஈழத்தை அமைக்க முன்வரவேண்டும்.

தள்ளாத வயதிலும் தமிழர்களுக்காகத் தவிக்கின்ற செல்வாவின் அகிம்சை வழியிலே நாம் போராடினுலும், ''இனியும் பார்த்துக்கொண்டிருக்காதீர்கள்— துப்பாக்கியெடுத்து அழியுங்கள் துரோகிகளை'' என்று தன் சுட்டு விரலை எப்போது காட்டுவார் என்று நாம் தயாராக இருத்தல்வேண்டும். வேற்றுமை எமக்குள் நீங்கி, நீங்காத ஒற்றுமைகொண்டால் தோற்று ஓடுவர் எதிரிகள்; அப்போது ஏற்றுவோம் எம் கொடி உதய சூரியனை. இதுவே இளைஞர்களாகிய எம்பணி என்பதைஎன்றுமெ மறத்தல் கூடாது.

—க. தேவதாஸ்,
அளவெட்டி.

## நீதி மன்றத்தில் விடுதலை வீரர்கள்!

பெயர்: மதன்லால் திங்கரா
பிறப்பு: இந்தியா

1909ம் ஆண்டு ஜூலை 1ம் திகதியன்று இலண்டனில் சேர் கர்ஜான் வில்லி என்பவரை இவர் சுட்டுக் கொலை செய்தார் என்ற குற்றச் சாட்டின் மீது இலண்டனிலுள்ள 'ஓல்ட்பெய்லி' நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் இவர் குற்றவாளியாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார். தீர்ப்பின் பின்னர் நீதிபதியைப் பார்த்து இவர் கூறியது!

"தேசாபிமானம் மிக்க இந்திய இளைஞர்களைத் தூக்கிலிட்டு, நாடு கடத்தப்படும் மிருகத்தனமான செய்கைக்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ளுவதற்காக ஆங்கிலேயரின் இரத்தத்தைச் சிந்த அன்று முயன்றேன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்! இம்முயற்சியில் நான் எனது மனச்சாட்சியைத் தவிர வேறுயாரையுமே கலந்தாலோசிக்கவில்லை. என் கடமையைத் தவிர வேறு யாருடனும் சேர்ந்து நான் சதியாலோசனை செய்யவுமில்லை. அந்நியரின் துப்பாக்கி முனைகொண்டு அடக்கிவைக்கப்பட்டிருக்கும் ஒரு நாட்டுமக்களுக்கு நிராயுதபாணிகளான ஓர் இனத்தினருக்கு—போராடுவது என்ற உரிமை அடிக்கடி மறுக்கப்பட்டு வருவதால், நிரந்தரமான போர்நிலையிலேயே அவர்கள் இருக்கிறுர்கள் என்று நான் நம்புகிறேன். திடீரெனத் தாக்கினேன்! எனக்குத் துப்பாக்கி மறுக்கப்பட்டதால் என் கைத்துப்பாக்கியால் சுட்டேன்!! நான் ஓர் இந்து என்ற முறையில், நாட்டுக்கு இழைக்கப்படும் தீமையைக் கடவுளுக்குச்செய்யப்படும் அவமதிப்பாக கருதினேன். என் தாய் நாட்டின் இலட்சியம் ஸ்ரீ இராமரின் இலட்சியம்; அவளுக்குச் செய்யும் சேவை ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்யும் சேவை. செல்வத்திலும், அறிவிலும் ஏழையான என்னைப்போன்ற ஒரு மகன், தன் தாய்க்கு அர்ப்பணம் செய்யக்கூடியது தனது சொந்த இரத்தத்தைத் தவிரவேறு எதுவுமில்லை! எனவே அதையே அவளுடைய பாதங்களில் அர்ப்பணம் செய்கிறேன். இந்தியாவுக்கு இப்பொழுது தேவைப்படும் படிப்பினை எப்படிச்சாவது என்பதை அறிந்து கொள்ளுவதே! இதைப்போதிப்பதற்குள்ள ஒரே வழி நாமே சாவதுதான்! ஆகையால் நான் உயர்ந்த இலட்சியத்திற்கு உயிரைக்கொடுத்துக் கீர்த்தியுடன் சாகிறேன். வந்தே மாதரம்.''

சான்று: மகாத்மா காந்தி நூல்கள்,
காந்திநூல் வெளியீட்டுக் கழகம் சென்னை 2, மே, 19ε5 பக்கம்-677


பிரகாசமான சலவைக்கு
மில்க்வைற் நீல சோப்

வாங்கிப் பாவியுங்கள். ஒரு கட்டியின் விலை -/40 சதம் மட்டுமே. 15 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி அழகிய காந்தி மேசைக் கலண்டர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANT'RAN

# சிங்களக் குடியேற்றம் பற்றி ஆராய்வதற்கு குழு நியமனம்!

தமிழ் பேசும் பிரதேசங்களில், அரசாங்க நிலங்களில் சட்டவிரோதமாகக் குடியேறிய சிங்களவர்களின் தொகைபற்றியும் இதனால் தமிழ்பேசும் மக்கள் பாதிகப்பட்டிருக்கும் நிலைமை பற்றியும் விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 24-1-76ல் கொழும்பிலுள்ள முஸ்லிம்லீக் மண்டபத்தில் கூடிய தமிழ் — முஸ்லிம் கூட்டணிக் கூட்டத்தில் ஓர் உப குழு நியமிக்கப்பட்டது. இந்த உபகுழு 19-2-76 தனது அறிக்கையைச்சமர்ப்பிக்கும்.

தமிழ் ஈழத்து நீதிமன்றங்களில் தமிழை மட்டுமே நீதிமன்றமொழியாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு உருவாக்கப்பட்ட தமிழ் — முஸ்லிம் கூட்டணி இப்போது தமிழ் ஈழத்தில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்கள் பற்றியும் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் புத்தளம் பகுதியிலும் நடைபெற்றுள்ள சிங்களச் சட்டவிரோதக் குடியேற்றம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென பின் வருவோரைக் கொண்ட ஓர் உபகுழு நியமிக்கப்பட்டது.

தந்தை செல்வா, டாக்டர் எம். சி. எம். கலீல், ஜனாப் நயினுமரிக்கார் பா. உ. எம். எம். முஸ்தபா பா. உ. சே. மா. செல்லத்தம்பு பா. உ. ஏ. எம். மஜீத் பா. உ. எம். சிவசிதம்பரம், மசூர் மவ்லானா ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாப் நயினா மரிக்காரும், ம. சிவசிதம்பரமும் இக்குழுவின் அழைப்பாளர்களாக கடமை புரிவர்.

# ‘சிறையிலிருந்து தப்பியோடியதற்கு சிங்கள இனவெறியரே காரணம்!’’

## தமிழ் இளைஞர்கள் கொடுத்த வாக்குமூலம்!

1974ம் ஆண்டு அனுராதபுரம் சிறையிலிருந்து தப்பியோடி ஓராண்டு கழித்து மீண்டும் சென்ற ஆண்டு கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களான இரத்தினகுமார், தனபாலசிங்கம் ஆகிய இருவருக்கும் சிறையிலிருந்து தப்பியோடிய குற்றத்துக்காக சென்ற 23-1-76 வெள்ளிக்கிழமை ஆறுமாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

அனுராதபுரம் சிறைச்சாலையில் வைத்து நடைபெற்ற விசாரணையின் பின்னரே இந்த சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அரசியல் காரணத்துக்காக கைதுசெய்யப்பட்ட இவர்கள் இருவரும் நீதி விசாரணை ஏதுமின்றி சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போதே—1974ம் ஆண்டு சிறையிலிருந்து தப்பியோடினார்கள்.

விசாரணையின்போது தாம் தப்பியோட நேர்ந்ததற்கான காரணத்தை இவர்கள் விளக்கினர். சிங்கள ஜெயிலர்களும் ‘காட்’ மாரும் கடைப்பிடித்த இனத்துவேஷமும் இனப்பாரபட்சமும், துன்புறுத்தலுமே தப்பியோட வேண்டுமென்ற எண்ணம் தமக்குத் தோன்றுவதற்கு காரணமாக இருந்ததாக இவர்கள் தமது விளக்கத்தில் கூறியிருப்பதாகத் தெரிய வருகிறது.

## கல்முனையில் மாபெரும் கூட்டம்!

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல்மைதானத்தில் தமிழர் கூட்டணியின் மாபெரும் பொதுக்கூட்டமொன்று டாக்டர் உதுமாலெவ்வை தலைமையில் 31-1-76 சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் தமிழர் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் உரையாற்றவிருக்கின்றனர். இக்கூட்டத்தில் “அகில இலங்கை இஸ்லாமியர் இணைப்புப்பேரவை’’ என்ற இஸ்லாமியத் தமிழ் இளைஞர்களின் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது. தமிழ் ஈழவிடுதலைக்கு ஆதரவாகஇந்தப்புதிய இஸ்லாமிய இயக்கம் இயங்குவதுடன், தமிழர் கூட்டணியின் துணை இயக்கமாகச் செயற்படும்.

## வட்டுகோட்டையில் ஆலோசனை கூட்டம்!

பெப்ரவரி 4 ஏற்பாடுகள் இறுதி முடிவு செய்வதற்காக வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவையின் ஆலோசனைக் கூட்டமொன்று 28-1-76 புதன் பிற்பகல் 5 மணிக்கு சுழிபுரத்திலுள்ள கூட்டணி செயலாளாநாயகம் நாவலர் அமிர்தலிங்கத்தின் இல்லத்தில் நிகழுகிறது.

## வெடிகள் தயார்.

—1-ம் பக்கத் தொடர்

அந்நாளில் கொளுத்தி மகிழ்வதற்காகதமிழ்ச்சிறுர் பலரும், பொங்கலுக்காகத் தமது பெற்ருர் வாங்கிக் கொடுத்த பட்டாசுகளைப் பாதுகாத்து வைத்திருக்கின்றனா. இவர்கள் யாவரும் பெப்ரவரி 4ஆம் திகதி அதிகாலை 12-00 மணிக்கு ஒரே நேரத்தில் தமது பட்டாசுகளைக்கொழுத்துவதன்மூலம் தமிழ் ஈழத்தின் உதயததை உலகுக்கும் பறைசாற்ற முன்வருவார்களாக.

தனித்தனியாக அவ்வப்போதைக்கு அதைச் செய்யாமல் யாவரும் கூட்டாக ஏககாலத்தில் அதைச் செய்து தமிழ் ஈழத்தின் தோற்றத்தை ஒரே குரலில் எதிரொலிப்பார்களாக

## இலங்கையின் அரச பரம்பரை!?

இந்தியாவில் நேருவின் குடும்பமும் இலங்கையில் பண்டாரநாயகாகுடும்பமும் இரண்டு தலைமுறைகளாகப் பதவியில் இருந்து வருகின்றன எனறும். எதிர்காலத்தில் இந்திராவின் புதல்வர் சஞ்சாய் காந்திக்கும் தனக்கும் அதுபோன்ற மாபெரும் அதிர்ஷ்டம் வாய்க்கவேண்டும் எனவும் திரு. அநுரா பண்டாரநாயகா விருப்பம் தெரிவித்தார்.

—பம்பாய் இளைஞர் காங்கிரஸ் ஊழியாகள் கூட்டத்தில் அநுரா.

(வீரகேசரி 15-1-76)

## மலையகத் தமிழர் 15பேர் கைது

இந்நாட்டுக்காக பல தலைமுறைகளாக உழைத்தும், இந்நாட்டில் உரிமை மறுக்கப்பட்டதனல், தமிழ் நாட்டுக்கு செல்லவிருந்த 15 மலைநாட்டுத் தமிழ்க் குடும்பங்களின் தலைவர்கள் சென்ற சனிக்கிழமை (24-1-76) பொலிசாரால் திடீரெனக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பட்டிருப்புத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவை கிளைகள்

பட்டிருப்புத்தொகுதியில் கடந்த சில மாதங்களில் அமைக்கப்பட்ட த. இ. பேரவைக் கிளைகளும் அதன் நிர்வாக உறுப்பினரும் பவருமாறு:

13ம் கிராமம் மண்டூர் த.இ.பே.

தலைவர் சின்னத்தம்பி இராசையா, உபதலைவர்; சிவஞானம் பரந்தாமன், செயலாளா: பாக்கியராசா அருளானந்தம், உபசெயலாளர்; இ. மேகநாதன், பொருளாளர்கள்; சின்னத்தம்பி மாணிக்கம், இளையதம்பி கோணேசபிள்ளை.

கொக்கட்டுச்சோலை த. இ. பே.

தலைவர்: தெய்வநாயகம், உபதலைவர்கள்: சிவஞானம், ஏகாம்பரம், பிரேம்குமார், செயலாளர்: செல்லையா கந்தவனம்.

களுதாவளை த. இ. பே.

தலைவர்: எஸ். புண்ணியமூர்த்தி, உபதலைவர்: பூ. வன்னியசிங்கம், செயலாளர்: சீ. கணேசன்.

தேற்றாத்தீவு த. இ. பே.

தலைவர்: சி. கோபாலகிருஸ்ணன், உபதலைவர்: ஓ. இரகுபதி, செயலாளர்: க. சோமசுந்தரம், உபசெயலாளர்: பொ. சோமசுந்தரம், பொருளாளர்: க. ரவி.

குருக்கள் மடம் த. இ. பே.

தலைவர்: ம. பரமேஸ்வரன் (புரட்சி) செயலாளர்: ச. சாம்பசிவம், பொருளாளர்: க. நாராயணபிள்ளை.

## பௌத்த சிங்கள...

—1-ம் பக்கத் தொடர்

ஒரு சாதாரண பேர்வழியல்ல; ஒரு படித்த சிங்களவர்; கம்யூனிஸ்ட் தலைவரான பீட்டர் கெனமனின் வீடமைப்பு அமைச்சின் செயலாளராகப் பொறுப்பான பதவி வகிப்பவர். இந்த மெத்தப்படித்த சிங்களவர் ககியுள்ள பௌத்த வெறியை 25-1-76 ஞாயிறு டெயிலிமிரர் ஏடு தலைப்புச் செய்தியாக முக்கியத்துவம் கொடுத்துவெளியிட்டுளளது அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

- அரசாங்கத்திலும் கூட்டுத்தாபனங்களிலும் கைத்தொழில் நிலையங்களிலும், ஏனைய தனியார் வர்த்தக நிலையங்களிலும் எழுபத்தைந்து சதவீதமான உத்தியோகங்கள் பௌத்தர்களுக்கே வழங்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையை பௌத்த சங்கங்கள் அனைத்தும் எழுப்ப வேண்டும்.
- வெளிநாடுகளுக்கு தூதுவர்களாக பௌத்தர்கள் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். பௌத்தர்கள் அல்லாதாரை வெளிநாடுகளுக்கு தூதுவர்களாக அனுப்புவது இலங்கையைப்போன்ற ஒரு பௌத்த நாட்டுக்கு அவமானமாகும்.
- பௌத்த சிலைகளைப் பாதுகாக்கவும், பேணவும் அமைக்கப்பட்டுள்ள தொல் பொருளாய்வுத் திணைக்களத்திற்கு பௌத்தர்கள் அல்லாதார் நியமிக்கப்பட்டுள்ளது துக்கத்துக்குரியவிடயமாகும்.
- பொது டிறஸ்ரி திணைக்களத்திலுள்ள பௌத்தர் அல்லாதார் வெளியேற்றப்பட்டு, அங்கு பௌத்தர்கள் நியமிக்கபடவேண்டும்.
- பல்கலைக் கழகங்கள் பௌத்த சூழ்நிலையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.
- பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள இனவாரி, மதவாரி அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட வேண்டும்.

இதே கூட்டத்தில் பேசிய சேர் சேனரத்குணவர்த்தன பௌத்தம் மட்டுமே அரசாங்க மதமெனப் பிரகடனப் படுத்தப்படவேண்டும் என்று கூறியிருக்கிருர்.

பௌத்த குருமார் கூட்டமொன்றில் சில நாட்களுக்கு முன் பௌத்தம் சகல மாணவர்களுக்கும் கட்டாயபாடமாக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

இதுபற்றி தமிழர் கூட்டணி பிரமுகர் ஒருவர் கருத்துக் கூறுகையில்—பௌத்த வெறியர்களின் மேற்கண்ட கருத்துக்களை அரசாங்கம் இப்பொழுதே வரிக்குவரி கடைப்பிடித்து வருவதாகவும்,- தனிச்சிங்கள பௌத்த இராச்சியமொன்றை உருவாக்க வேண்டுமென்ற சிங்கள பௌத்தர்களின் ஆசை நிறைவேற ஒரே வழி தமிழ் ஈழத்தை தனியே பிரித்து தமிழர்களை சிங்கள நாட்டிலிருந்து அப்புறப் படுத்துவதே என்றும் தெரிவித்தார்.

## ஐ. நா. சபை முன்...

—1-ம் பக்கத் தொடர்

ஐ. நா. சபை முன்பு நடைபெறும் ஆர்ப்பாட்டம் அகில உலகத்தின் கவனத்தையும்கவருகின்ற முறையிலும், தமிழ ஈழக் கோரிக்கையை உலக நாடுகள் உணரும் விதத்திலும் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## குழப்பம் செய்த...

—1-ம் பக்கத் தொடர்

நிறுத்தவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அப்போது சிங்களக் காடையர்கள் தோட்டத் தொழிலாளத் தமிழ் மக்களை தாக்கமுற்பட்டனர். தமிழ் மக்கள் அஞ்சாது சிங்களவரை எதிர்த்து தாக்கி அவர்களை விரட்டியடித்து, இது 1958 அல்ல 1976 என்பதை எடுத்துக்காட்டினர்.

இப்பகுதியில் தோட்டத் தமிழ்ப்பெண்கள் இரவு நேரங்களில் தனியே செல்ல முடியாது ஏனெனில் சிங்களக் காடையர்களினல் பலவித ஆபத்துக்குள்ளாகிருர்கள். 90% தமிழர்களைக் கொண்ட இப்பகுதியில் தமிழர்கள் ஒரு தமிழ் விழா எடுக்கமுடியாத நிலையில் தமிழன் வாழ்வதா? இந்த அநியாயத்தை கேட்பதற்கும் இத்தோட்டத்தமிழ் மக்கள் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ்வதற்கும் வேறு வழியே இல்லையா? என்று அவர்கள்கேட்கிருர்கள்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா விதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜனவரி மாதம் 28-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org